பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
05 07 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, அர்ஜென்டினா அதிபர் திரு. **Javier Milei**-யுடன் பரஸ்பரம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார்.

2. விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. கேரளாவில் புதியவகை நிஃபா வைரஸ் பரவி வருவதன் காரணமாக, கோழிக்கோடு, மலப்புரம், பாலக்காடு மாவட்டங்களில் உஷார் நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

4. தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள அஇஅதிமுக தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

5. கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அர்ஜென்டினா அதிபர் திரு. **Javier Milei**-யுடன் பரஸ்பரம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார்.

ஐந்து நாடுகள் அரசு முறை பயணத்தின் மூன்றாவது கட்டமாக இன்று அவர் அர்ஜென்டினா சென்றடைந்தார்.

அர்ஜென்டினாவின் விடுதலை போராட்ட வீரரும், அந்நாட்டின் தேசதந்தையுமான ஜெனரல் **Josedesan Martin** சிலைக்கு பிரதமர் மரியாதை செலுத்துகிறார்.

பின்னர், அந்நாட்டு அரசு சார்பில் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்நாட்டு அதிபர் திரு. **Milei** வழங்கும் மதிய உணவு விருந்தில் பிரதமர் பங்கேற்கிறார்.

திரு. நரேந்திர மோடியின் இந்த பயணத்தின் போது அரியவகை கனிமங்கள், எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, அந்நாட்டு தலைநகர் **Buenos Aires** சென்றடைந்த அவருக்கு இந்திய வம்சாவளியினர் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை வரவேற்கும் வகையில் கதக்களி, பரதம் மற்றும் ஒடிசி நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**>><><><><<**

விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற மத்திய வங்கி ஆளுநர்கள் பங்கேற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், வளரும் நாடுகள் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் நிதிசார் சவால்களை எதிர்கொள்வதாக கூறினார்.

வளரும் நாடுகளிடையே பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் நல்லுறவை ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், பிற வளரும் நாடுகளுக்கும் உதவிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

லட்சக்கணக்கான மக்களுக்கு வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வாழ்வாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்று என்று அவர் குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், தேசிய மின்சார வாகன இயக்கம் உள்ளிட்ட முயற்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், கதி சக்தி தேசிய பெருந்திட்டம் மற்றும் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

**>><><><><<**

கேரளாவில் புதியவகை நிஃபா வைரஸ் பரவி வருவதன் காரணமாக, கோழிக்கோடு, மலப்புரம், பாலக்காடு மாவட்டங்களில் உஷார் நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் பல்வேறு மாவட்டங்களில் நிஃபா வைரஸ் பரவி வருவதாகவும், தொற்று பாதிப்பு கண்டறிதல், தனிமைப்படுத்துதல், கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆகியவை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நிஃபா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திருமதி. வீனா ஜார்ஜ் கூறியுள்ளார்.

வைரஸ் மேலும் பரவாமல் தடுக்கும் வகையில், மாவட்ட அளவிலான தடை செய்யப்பட்ட பகுதிகள், உதவி தொலைபேசி எண்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் கடந்த வாரம் இயற்கைக்கு முரணாக உயிரிழந்தவர்கள் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்நிலையில், இந்த தொற்று பாதிப்பு காரணமாக கோழிக்கோட்டைச் சேர்ந்த 18 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>><><><><<**

உத்தரப்பிரதேச மாநிலம் சம்பல் மாவட்டத்தில் மீரட் - **Badaun** நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

**>><><><><<**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள அஇஅதிமுக தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணிக்கு மேலும் பல கட்சிகள் வரவிருப்பதாக கூறினார்.

பிஜேபி தலைவர் திரு அமித் ஷா கூட்டணி குறித்து பேசுகையில் முதலமைச்சர் வேட்பாளராக தம்மை அறிவித்ததாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தை ஆளும் திமுகவுக்கு எதிராக அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிச்சாமி கூறினார்.

**>><><><><<**

கர்நாடகா மாநிலத்தின் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக தமிழகத்தின் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மீண்டும் அதிகரித்துள்ளது.

அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருவதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119 புள்ளி ஏழு இரண்டு அடியாக உயர்ந்துள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 42 செகண்ட்ஸ்)

**>><><><><<**

இமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகனமழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மலைப்பாங்கான பகுதிகளில் கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் தேவையின்றி பயணம் மேற்கொள்வதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் நதிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு செல்ல வேண்டாம் என்றும், உள்ளூர் நிர்வாகத்தின் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு போன்ற அவசர நிலையை எதிர்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து கடந்த இரண்டு வாரங்களாக மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 60 பேர் உயிரிழந்ததாகவும், 37 பேரை காணவில்லை என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

மேலும், தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக 223 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, கனமழை காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபாய் மாத வாடகைப் படியாக வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு சுக்விரீந்தர் சிங் சுக்கு அறிவித்துள்ளார்.

**>><><><><<**

அமர்நாத் கோயிலுக்கு செல்லும் ஆறாயிரத்து 979 யாத்ரீகர்கள் கொண்ட மற்றொரு குழு இன்று ஜம்முவில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

இதில் 2 ஆயிரத்து 753 யாத்ரீகர்கள் அடங்கிய குழு பல்தால் முகாமில் இருந்தும், நான்காயிரத்து 226 யாத்ரீகர்கள் அடங்கிய குழு பஹல்காம் பகுதியில் உள்ள நுவான் முகாமில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

பல்தால் முகாமில் இருந்து புறப்பட்ட யாத்ரீகர்களின் பயணத்தை ஜம்மு கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தொடங்கி வைத்தார்.

இதனையடுத்து, ஜம்மு கஷ்மீர் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2 நாட்களில் 26 ஆயிரத்து 800 க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் அமர்நாத் கோயிலுக்கு சென்று வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>><><><><<**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**Ontario –** வில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் அவர், 21-18, 21-9 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் **Chou tien Chen**-ஐ வென்றார்.

----------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்று ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ரி – அமெரிக்காவின் ராபர்ட் **Galloway** இணை, போர்ச்சுக்கலின் **Nuno Borges -** அமெரிக்காவின் **Marcos Giron** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Angel Reyez Varela** இணை அர்ஜென்டினாவின் **Horacio Zeballos -** ஸ்பெயினின் **Marcel Granollers** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் ரித்விக் சவுத்திரி பொல்லிபல்லி – கொலம்பியாவின் நிக்கோலஸ் **Varrientos** இணை, பிரிட்டன் இணையை எதிர்கொள்கிறது.

**>><<**